# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.09.21ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *நலின் பிரணாந்து மன்றம்*
## *(கூட்டிணைத்தல்)*

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

**நலின் பிரணாந்து மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நலின் பிரணாந்து அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## நலின் பிரணாந்து மன்றம்
## (கூட்டிணைத்தல்)

## நலின் பிரணாந்து மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

“நலின் பிரணாந்து மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான பிரபல்யமான மன்றமொன்று, அதன் உறுப்பினர் களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க அதனது அனைத்து குறிக்கோள்களை அடைந்து கொள்ளுவதற்காக இது காலவரை தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்; இம்மன்றம் தாபிக்கப்பட்டிருப்பது சில குறிக்கோள்கள் மற்றும் விடயங்கள் அந்த மன்றத்தினால் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டும் அமுல்படுத்தப்பட்டிருப்பதாதலாலும்: அம்மன்றத்தைக் கூட்டிணைத்துக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டிருப்ப தாதலாலும்: அந்தக் கோரிக்கையை அனுமதித்தல் வசதியளிப்புச் செய்தல் பொருத்தமானதென்பதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நலின் பிரணாந்து மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

நலின் பிரணாந்து மன்றத்தைக் கூட்டிணைத்தல்

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நலின் பிரணாந்து மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்கள் அல்லது அத்துடன் இத்தால் அமைக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டிணைக்கப்பட்ட குழு” எனக் குறிப்பீடு செயயப்படும்) “நலின் பிரணாந்து மன்றம்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதாதலாலும்; பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், அதனைப் பயன்படுத்துவதற்கும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அத்துடன் பயன்படுத்தவும்,அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலுக்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) சமய, கலாசார, சமூக மற்றும் பொருளாதார இடைச் செயற்பாடுகளின் ஊடாக இலங்கை பிரசைகளிடையே பரஸ்பர புரிந்துணர்வு, சமாதானம் சகவாழ்வு, சமய சகவாழ்வு, ஆன்மீக அபிவிருத்தி மற்றும் நட்பாண்மையை மேம்படுத்தல்;

(ஆ) சுயதொழிலில் ஈடுபட இயலச் செய்யும் வகையில் சாவால் மற்றும் தனிப்பட்ட திறன்களை மேம்படுத்தும் முகமாக நிதி மற்றும் வேறு விதமாக உதவி புரிதலும்;

(இ) தேவையுடைய மாணவர்களுக்கு தமது பாடசாலை சீருடைகள், உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்களை வழங்குவதன் ஊடாக உதவி புரிதல் மற்றும் மாணவர்களுக்கு அவர்களுடைய இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்விக்காக புலமைப் பரிசில்களை வழங்குதலும்;

(ஈ) பாடசாலையிலிருந்து நீங்கிச் செல்லும் இளைஞர், யுவதிகளுக்குப் பொருத்தமான செயற்றிட்டங்கள் தொடர்பாக துறைகளை இனங்காணல் மற்றும் எதிர்கால

தொழில்வாய்ப்புக்கள் தொடர்பாக ஏற்படுகின்ற போட்டிகளுக்கு முகங்கொடுத்தல் தொடர்பாக பயிற்சியளிக்கும் நோக்குடன் அவ்வாறான செயற்றிட்டங்களை நடாத்திச் செல்வதன் ஊடாக அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்;

(உ) பிரதேச மற்றும் கிராமிய மட்டங்களில் மாணவர்களின் விளையாட்டு, இசை போன்ற துறைகளை இனங்காணல் மற்றும் எதிர்கால தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக ஏற்படுகின்ற போட்டித்தன்மைக்கு முகங்கொடுத்தல் தொடர்பாக பயிற்சியளிக்கும் நோக்குடன் அவ்வாறான செயற்றிட்டங்களை நடாத்திச் செல்லல் ஊடாக அவர்களுடைய சமூக இயலுமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக ஊக்கப்படுத்துதலும்;

(ஊ) வலதுகுறைந்த நபர்களுக்கு அவர்களுடைய ஆளுமையை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவி உபகாரங்களை வழங்குதலும்;

(எ) ஆரோக்கியமான, ஒழுக்கமான, தேசப்பற்றுடன் கூடிய மனிதநேயமுடைய மனித சமுதாயமொன்றை உருவாக்குவதற்கும், புகையிலை, மதுசாரம் மற்றும் போதைவஸ்துக்களிலிருந்து விடுபட்ட சமுகமொன்றை மேம்படுத்துவதற்காகவும் இளைஞர், யுவதிகளை புத்திக் கூர்மையாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதலும்;

(ஏ) தூர கிராமப் பிரதேசங்களில் மக்களின் சுகாதார தேவைகளை இனங்காணல் மற்றும் அவ்வாறான பிரதேசங்களில் கிளினிக் மற்றும் மருத்துவ முகாம்களை நடாத்துதல் மற்றும் தேவையுடையோருக்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்குதலும்;

(ஐ) அரசாங்கப் பரீட்சைகளுக்குத் தயாராகின்ற மாணவர்களுக்கு உதவி புரிவதற்காக விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தலும்;

(ஒ) வீடமைப்பு, நீர் மற்றும் வீதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான தேவைகளுக்கான செலவீனங் களை ஈடுகட்டுவதற்கு ஏற்பாடு செய்தலும்;

(ஓ) மனித இனத்தின் செயற்பாடுகளின் காரணமாக துரிதமாக அழிவடைந்து வருகின்ற சுற்றாடல் கட்டமைப்பை பாதுகாத்துக் கொள்வதற்கு பிரயோக செயற்பாடுகளை இனங்காணல், அழிவை இழிவுபடுத்திக் கொள்வதற்கு சமுகத்தை விழிப்பூட்டல் மற்றும் சுற்றாடல்மய சமுகமொன்றை உருவாக்குதலும்;

(ஔ) மகளிருக்கு உரிய இடத்தினை வழங்கும் நோக்கில் அவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங் களை செயற்படுத்தல், சுயமுயற்சியில் முன்னேற்றுவதற்கு முயற்சிசெய்கின்ற மகளிர்களின் வாழ்வாதார வழிகளை ஏற்பாடு செய்துகொள்வதற்கான தடைகளை இனங் கண்டு அவற்றுக்கு வழிவகைகளைச் செய்தலும்;

(க) கர்ப்பிணிப் பெண்கள் தொடர்பாக விசேட மருத்துவ கிளினிக்கள் மற்றும் விரிவுரைத் தொடர்களை ஏற்பாடு செய்தல், பெண்களுக்கான ''சுவனாரி'' போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி முன்கூட்டியே இனங் கண்டு தடுத்துக் கொள்ளத்தக்க நோய்களுக்கான மருத்துவ ஆலோசனைகள் தொடர்பாக ஈடுபடுவதற்கும்;

(ங) சிறுவர்களில் விசேட தேவைகளையுடைய சிறுவர்களின் சுகாதார, கல்வி மற்றும் போசாக்கு நிலைமைகளைக் கட்டியெழுப்புதல்;

(ச) கிராமிய மட்டத்தில் பேணிச் செல்லப்படுகின்ற ஆரம்ப பாடசாலைகளின் பண்புசார் தன்மை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டியெழுப்பி, அவ்வாறான சிறுவர்களின் போசாக்கு மட்டம் மற்றும் ஒழுக்கப் பண்பினை ஏற்படுத்துவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளுதலும்; மற்றும்

(ஞ) இலங்கையில் தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வை மேம் படுத்தும் நோக்கில் சகல இனக் குழுக்களையும் ஒன்றிணைத்தலுமாகும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் அமைச்சினது அல்லது திணைக்களத் தினது பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டிணைக்கப் பட்ட குழு உறுதிப் படுத்துதல்

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மூலம் தமது குறிக்கோள்களை அமுல்படுத்தும்போது, அக்குறிக்கோள்களானது அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைவாகவும் தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர், துறவு போசகர்கள், துறவுநிலையற்ற போசகர்கள் மற்றும் குழு அங்கத்தவர்கள் 10 பேருக்குக் குறையாத எண்ணிக்கையினரைக் கொண்ட (இதனகத்துப்பின்னர், "குழு" என அழைக்கப்படும்) முகாமைக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) குழுவின் ஆரம்ப அங்கத்தவரான பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நலின் பிரணாந்து அவர்கள் குழுவின் ஆரம்ப தலைவராயிருத்தல் வேண்டும்.

(3) (அ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழு, இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் தினத்திற்கு முந்திய தினமொன்றில் மன்றத்தின் முகாமைத்துவக் குழுவின் அங்கத்துவத்தை வகித்த நபர்களை உள்ளடக்கியவர்களாக இருக்க வேண்டியதுடன், அக்குழுவின் அங்கத்தவர்கள் இந்தச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க புதிய குழுவொன்று நியமிக்கப்படும் வரை பதவிகளை வகித்தல் வேண்டும்;

(ஆ) இந்தச் சட்டம் அமுல்படுத்தல் ஆரம்பமாகும் தினம் முதல் ஒரு வருட காலத்தினுள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழுவொன்றை நியமித்தல் அல்லது தெரிவு செய்தல் வேண்டும்.

(4) (அ) அனுசரணையாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் உள்ளடங்கலாக குழுவின் சகல அலுவலர்களும் மூன்று வருட காலத்திற்கு நியமனம் செய்யப்படுதல் அல்லது தெரிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதோடு அந்த மூன்று வருட காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அந்த அலுவலர் அனுசரணையாளராகவோ ஆலோசகராகவோ மீண்டும் நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது தெரிவு செய்யப்படுவதற்கு தகுதி பெறுவர்;

(ஆ) மரணமடைதல், பதவிவிலகல், சித்தசுவாதீனமடைதல் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படல் போன்றவற்றின் காரணமாக ஏதேனும் அலுவலரின் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் குழுவினால் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்குவிதிகளை கவனத்திற்கொண்டு அடுத்த வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறும்வரை எஞ்சியுள்ள காலப் பகுதிக்கு நியமித்துக் கொள்ளும் தத்துவம் குழுவுக்கு உரித்தாகும்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பணிகளுக்குத் தேவையான அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை கொள்வனவு செய்தல், குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது வாடகைக்கு வழங்குவதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது வேறுவிதமாகப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் அந்நோக்கத்திற்கு சட்டரீதியாக கையகப்படுத்திக் கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தின் குறிக்கோளுடன் சந்தர்ப்பமானது என தோன்றும் போது அது தொடர்பில் பணியாற்றுவதற்கு அல்லது வெளியேற்றுவதற்கும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு இயலும் வகையில் ஊழியர்களை நியமனம் செய்தல், சேவையில் ஈடுபடுத்தல் அல்லது அவர்களை சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்கும்;

(உ) ஒத்த குறிக்கோள்களையுடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் ஒருங்கிணைப்பு செய்வதற்கும் ; மற்றும்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் சகல குறிக்கோள்கள் அல்லது அவற்றில் சில குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேவையானதும் பொருத்தமானது மான சகல செயற்பாடுகள் மற்றும் விடயங்களை செய்வதற்கும் மற்றும் அமுல்படுத்துவதற்கும்,

கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் இருக்குமாக.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்*

**6**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் காலத்திற்குக் காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் அல்லது விசேட பொதுக் கூட்டத்தில் அதற்கு சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) பதவி வகிப்பவர்கள் மற்றும் அவர்களுடைய பதவிக் காலம், சேவையிலிருந்து நீங்குதல், விலகுதல் அல்லது பதவியிலிருந்து நீக்குதல் மற்றும் அவர்களுடைய அதிகாரங்கள் மற்றும் பணிகள்;

(ஆ) பதவிகளை வகிப்பவர்கள் தவிர, குழுவின் அங்கத்தவர்களைத் தெரிவு செய்து கொள்ளல் மற்றும் அவர்களுடைய பதவிக் காலம் மற்றும் அவர்களுடைய தத்துவங்கள் மற்றும் பணிகள்;

(இ) அங்கத்துவத்தை வகைப்படுத்தல், அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளல், நீக்கல், விலகுதல் மற்றும் அங்கத்துவக் கட்டணம்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்கள், நிருவகித்தல் மற்றும் முகாமை செய்தல், அதன் நிதியங்களின் பொறுப்புத் தன்மை, கணக்குகளைப் பேணல் மற்றும் கணக்காய்வு;

(உ) குழுவின் ஏதேனும் கூட்டத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள், அதன் கூட்ட நடப்பெண் மற்றும் கூட்டங்களின் போது பணிகளை மேற்கொள்ளல்; மற்றும்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் பணிகளை முகாமை செய்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளல்.

(2) (1) ஆம் பிரிவின் கீழ், ஒழுங்கு விதியொன்று உருவாக்கப்பட்ட விதத்தில் மற்றும் அவ்வாறே கூட்டத்தின்போது, அவ்வாறான கூட்டத்தின்போது, கூட்டுத்தாபனத்தினால் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியொன்றை திருத்தம் செய்தல், மாற்றம் செய்தல், சேர்த்தல் அல்லது இரத்துச் செய்தல் மேற்கொள்ளப் படலாம்.

(3) (1) உப பிரிவின்கீழ் உருவாக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளை வர்த்தமானப் பத்திரத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக் கப்பட்ட குழுவின் நிதியம்*

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தோடு கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்காகவும் அது தொடர்பாகவும் பரிசில், இறுதிவிருப்பாணக் கொடை, நன்கொடை, உதவுதொகை அல்லது மானியக் கொடை என்றவகையில் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் முகாமைக் குழவினால் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வங்கியொன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளினால், கூட்டுத்தாபனத்தின் கணக்கில் செலவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் வகிக்கப்படுகின்ற சகல செலவீனங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான சகல நிதியையும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்*

**8.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் சகல வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், குழுவினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கை பட்டயக் கணக்காய்வு நிறுவகத்தின் அல்லது சட்டத்தின் ஊடாக தாபிக்கப்பட்ட வேறு நிறுவனமொன்றின் அங்கத்துவம் பெற்றவராகவும், கணக்காளராக சேவையில் ஈடுபடுத்துவதற்கு அந்நிறுவனத்தின் சபையினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழொன்றைப் பெற்றிருக்கின்ற நபரொருவர்; அல்லது

(ஆ) ஏதேனும் கணக்காளர் நிறுவனமொன்றில் ஒவ்வொரு வதிவிட பங்காளர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அல்லது சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட

வேறு ஏதேனும் நிறுவனமொன்றில் அல்லது அங்கத்தவரொருவராக இருக்கின்றவரும், அதேபோன்று கணக்காளாராக தொழில் புரிவதற்காக அந்நிறுவனத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வகிப்பவரும், அவ்வாறான பட்டயக் கணக்காளர் கம்பனி,

எனப் பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**9.** (1) குழுவினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளுடன் ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பாகவும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றை தயார் செய்து அந்த அறிக்கைகளை மற்றும் கணக்குக் கூற்றுக்களை சமூக சேவை அலுவல்கள் சாட்டப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பதிவாளரிடம் அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) (1) ஆம் உப பிரிவில் குறிக்கப்பட்டுள்ள அறிக்கைக்கு கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**10.** கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக்

கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடனும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்*

**11.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை*

**12.** தவிசாளர் மற்றும் குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடிய பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வெவ்வேறு அங்கத்தவர்கள் இருவர் முன்னிலையிலன்றி கூட்டுத்தாபனத்தின் எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசின் உரிமைகளைப் பேணல்*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.